# 18

# பிறருக்கு உதவுவோம்

**''ஒரு மனிதனிடம் நீங்கள் உதவி கேட்கிறீர்கள். அவன் உங்களுக்கு உதவவும் இல்லை, வேறு யாரிடமிருந்தாவது உதவியைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கவும் இல்லை. இந்நிலையில் அவனுக்காக ஜனாஸாத் தொழுங்கள். ஏனெனில், அவன் இறந்தவன் போலாவான்''**

(இமாம் இப்னு ஷுப்ருமா).



ஒருவர் இமாம் இப்னு ஷுப்ருமாவுக்கு பெறுமதியான பரிசுப் பொருளொன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். அவருக்கு ஓர் உதவி தேவைப்பட்டபோது இமாம் இப்னு ஷுப்ருமா அவ்வுதவியை செய்து கொடுத்திருந்தார்கள். அதற்கு பிரதியுபகாரமாகவே இப்பரிசுப் பொருள் வழங்கப்பட்டது. அதை ஏற்க மறுத்த இப்னு ஷுப்ருமா, நான் எனது கடமையையே செய்தேன் எனக் கூறிவிட்டு மேலே குறிப்பிடப்பட்ட தனது கருத்தை முன்வைத்தார்கள்.

பிறருக்கு உதவுவது ஒரு முஸ்லிமின் அடிப்படைப் பண்பு என்பதனை இமாமவர்களது இக்கருத்து சுட்டிக் காட்டுகின்றது.

- தேவையேற்படின் பிறருக்கு உதவுவது கடமை.
- தனக்கு உதவ முடியாத நிலையிருப்பின் பிறர் மூலம் உதவியை பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதும் கடமை.

நற்கருமங்களே எமது வெற்றிக்கு அடிப்படையாக அமையும் என நாம் அனைவரும் உறுதியாக நம்புகின்றோம்.

‘‘நற்பணியாற்றுங்கள். இதன் மூலமே நீங்கள் வெற்றியடைக் கூடும்’’ (அல்குர்ஆன் 22:77)

எனவே எங்களால் முடிந்த அனைத்து வழிகளிலும் அவற்றைச் செய்வதற்கு முனைவோம். உள்ளத்தால், நாவினால், செயல்களினால் நன்மை செய்யும் ஆர்வம் எப்போதும் எம்மிடத்தில் காணப்படவேண்டும். எம்மைச் சூழவுள்ள சமூகங்களுக்கு உதவியாக இருப்பது நாங்கள் சிறந்த முஸ்லிம்களாக உயர்வதற்கும் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு முக்கியமான வழி என்பதனை ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

‘‘பாதையில் மக்களுக்கு இடைஞ்சலாக இருந்த ஒரு மரத்தை வெட்டி அகற்றியதன் காரணமாக ஒரு மனிதர் சுவன இன்பங்களில் புரண்டு கொண்டிருப்பதை நான் கண்டேன்’’ என நபி ﷺ அவர்கள் கூறினார்கள் (முஸ்லிம்).

பிறருக்கு உதவியாக இருக்க நாம் செய்யக் கூடிய சில நற்கருமங்களை அவதானிப்போம்:

### 1. அதிகமாக தர்மங்கள் செய்திடுவோம்

- **தர்மம் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது:**

  ‘‘ஒரு மு.:.மினுக்கு அவனது கஷ்டங்களை நீக்குவதனூடாக, அல்லது அவனது கடன்களை அடைப்பதனூடாக அல்லது அவனது பசியைப் போக்குவதனூடாக நீங்கள் ஏற்படுத்தக் கூடிய சந்தோஷம் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயலாகும்’’ (இப்னு அபீ துன்யா).

- **கஷ்டங்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கும்:**

  ‘‘தர்மத்தினூடாக உங்களது நோயாளிகளுக்கு சிகிச்சையளியுங்கள்’’ (பைஹகி).

- **அதிகமான நன்மைகளைப் பெற்றுத்தரும்:**

  ‘‘ஆண்கள் பெண்களிலிருந்து எவர்கள் தானதர்மங்கள் வழங்குபவர்களாக இருக்கின்றார்களோ, மேலும் எவர்கள் அல்லாஹ்வுக்கு அழகியகடன் அளித்தார்களோ அவர்களுக்கு நிச்சயமாகப் பன்மடங்கு அதிகமாக வழங்கப்படும். அவர்களுக்கு கண்ணியமான கூலியும் இருக்கிறது’’ (57:18).

- **பாவங்களுக்கு பரிகாரமாக அமையும்:**

  ‘‘நிச்சயமாக நன்மைகள் தீமைகளை அழித்துவிடுகின்றன’’ (11:114).

- **உலோபித்தனத்தை ஒழித்து விடும்:**

  ‘‘யார் தங்களது மனத்தின் உலோபித்தனத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்களோ அவர்களே வெற்றி பெறக்கூடியவர்களாவர்’’ (59:09)

- **மஹ்ஷரில் நிழல் பெற்றுத் தரும்:**

  ‘‘மனிதர்களுக்கு மத்தியில் தீர்ப்பு சொல்லப்படும் வரை ஒவ்வொரு மனிதனும் அவனது ஸதகாவின் நிழலிலே இருப்பான்’’ (அஹ்மத்).

## 2. நல்லவற்றை நேசிப்போம்

நாம் நல்லவற்றை நேசிக்கும்போது நல்லனவே செய்வோம். தீயன யாவும் தவிர்ப்போம். அப்போது எம்மால் அடுத்தவர்களுக்கு நன்மையே கிடைக்கும். எமது உள்ளங்கள் கூட நல்ல உள்ளங்களாக மாறும். அடுத்தவர்களுக்கு நன்மையையே நாடுகின்ற, தீமைகள் நடப்பதைக் காணச் சகியாத உயர்ந்த உள்ளங்களைப் பெறுவோம். அச்சந்தர்ப்பத்தில் எங்களது ஈமான் பரிபூரணமடையும்.

‘‘உங்களில் ஒருவர் தான் விரும்புவதையே தனது சகோதரனுக்கும் விரும்பாத வரை உண்மை விசுவாசியாக மாட்டார்’’ (புஹாரி, முஸ்லிம்).

## 3. பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குவோம்

‘‘தாம் தேவையுள்ளவர்களாய் இருந்தாலும் தங்களை விட பிறருக்கே முன்னுரிமை வழங்குகிறார்கள்’’ (59:09) என அல்லாஹ் அன்ஸாரீன்களைப் புகழுகின்றான்.

மதீனாவுக்கு வந்து சேர்ந்த முஹாஜிரீன்களை அன்ஸாரிகள் கவனித்த முறை பிறர் நலன் பேணலுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாகும். இத்தகைய அநேக முன்மாதிரிகளை அவர்களது வரலாற்றில் காணலாம்.

‘‘யர்மூக் யுத்தகளத்தில் காயப்படுத்தப்பட்டிருந்த இக்ரிமா (ரழி) அவர்களுக்கு கடும் தாகம் ஏற்பட்டது. அவரது உறவினர்களில் ஒருவர் நீரை எடுத்துக் கொண்டு அவரிடம் வந்தார். அவர்களுக்கு பக்கத்தில் காயப்படுத்தப்பட்ட பத்து முஸ்லிம்கள் வீழ்ந்திருந்தனர். அவர் நீரைக் குடிக்க முற்பட்டபோது, ‘தண்ணீர்!’ என்ற சப்தம் கேட்டது. அவ்வேளை ‘எனது சகோதரன் அருந்தாத வரை நானும் அருந்த மாட்டேன் என்கிறார் அவர். அப்போது அந்தச் சகோதரனுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டது. அவர் அதனை அருந்த முற்பட்டபோது அடுத்தவர் ‘தண்ணீர்’ என்றார். இப்படி பத்துப் பேரிடமும் நீர் கொண்டு செல்லப்பட்டது. பத்தாமவரிடம் சென்றபோது, ‘இக்ரிமா அருந்தாதவரை நான் அருந்த மாட்டேன்’ என்றார். முதலில் தண்ணீர் கேட்டவரான இக்ரிமா (ரழி) அவர்களிடம் திரும்ப வந்தபோது அவரது உயிர் பிரிந்திருந்தது. இப்படியாக ஒவ்வொருவரிடமும் நீரைக் கொண்டு சென்றபோது அவர்கள் ஒவ்வொருவரும் (பத்துப் பேரும்) இறந்த நிலையிலிருந்தனர்.’’

தனது உயிர் பிரியப் போகும் தறுவாயில் கூட தனது தேவையைவிடப் பிறரது தேவையை மதித்த இந்த உயர்ந்த முன்மாதிரியை எமது வாழ்விலும் கடைப்பிடிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

நாமும் அன்றாட வாழ்வில் இவ்வுயரிய குணங்களை வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும்.

**பசித்தோருக்கு உணவளிப்போம்.**
**தாகித்தோருக்கு நீரளிப்போம்.**
**நோயாளிகளைத் தரிசிப்போம். தேவைகளை நிவர்த்திப்போம்.**
**வறியோருக்கு உதவிடுவோம்.**
**நலிந்தோருக்கு கைகொடுப்போம்.**

**பயிற்சி:**

1. ''பிறருக்கு உதவுவது நன்மைகளை சம்பாதித்துக் கொள்ள இலகுவான ஒரு வழியாகும்'' எனும் கருத்தை உறுதிப்படுத்த ஹதீஸிலிருந்து ஓர் ஆதாரம் தருக.
2. ஸதகாவின் பயன்களுள் இரண்டைக் குறிப்பிடுக.
3. பிறரது தேவைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதற்கு ஸஹாபாக்கள் வாழ்விலிருந்து ஓர் உதாரணம் தருக.
4. ''நாம் விரும்புவதையே அடுத்தவருக்கும் விரும்புவது ஈமான் பரிபூரணமடைய வழியாகும்.'' இதற்கு ஹதீஸிலிருந்து ஓர் உதாரணம் தருக.

**செயற்பாடு:**

1. பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் பிறருக்கு உதவி செய்யக் கூடிய வழிவகைகளைக் கண்டறிந்து அவற்றை அட்டவணைப்படுத்திக் காட்டுக.